# உங்களை யாரும் மறந்துவிடவில்லை!

**www.youarenotforgotten.com**



**<u>உலகளாவிய கையெழுத்து இயக்கம்</u>**

**இ**ங்கே ஒப்பமிட்டுள்ள நாங்கள் 2017 ஆகஸ்டு 30ம் நாளை அனைத்துலக வலுக்கட்டாயக் காணாமலடித்தலுக்கு இரையானவர்களின் நாளாக நெஞ்சில் நிறுத்திக் கடைப்பிடிக்கிறோம்.

போருக்கு முன்னும் போர்க் காலத்திலும் போருக்குப் பின்னும் சிறிலங்காவில் வலுக்கட்டாயமாகக் காணாமலடிக்கப்பட்ட பத்தாயிரக் கணக்கான தமிழர்களை மீண்டும் ஒருமுறை நினைவுகூர்கிறோம்.

இவர்கள் என்னாயினர் என்பதைப் போர் முடிந்துஎட்டாண்டுகழித்தும் இவர்களின் உறவினர்களால் கண்டறியமுடியவில்லை.

ஐக்கியநாடுகள் அமைப்பு இந்தநாளை நினைவேந்துகையில் இப்படிச் சொல்கிறது: ***"இக்கொடுஞ்செயலால் தோற்றுவிக்கப்படும் அச்சவுணர்வுகாணாமற்போனவர்களின் நெருங்கியஉறவினர்களைமட்டுமல்லாமல் அவர்களின் சுற்றத்தாரையும்,ஒட்டுமொத்தச் சமூகத்தையும் கூட பாதிக்கிறது."***

சிறிலங்காவில் தமிழ்த் தேசிய இனமும் புலம்பெயர் தமிழர்களும் கடைசியாகசிறிலங்கா இராணுவத்தின் பிடியில் காணப்பட்ட இத்தனைத் தமிழர்கள் வலுக்கட்டாயமாகக் காணாமலடிக்கப்பட்டதன் விளைவுகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர். சிறிலங்கா இராணுவம் அநேகமாய் முழக்கமுழுக்கவே சிங்களவர்களால் ஆனது. காணாமற் போனவர்களின் உறவினர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நேரிட்டது என்று தெரிந்து கொள்ள முடியாத தவிப்பு, காணாமல் போனவர்களுக்காக அழுது தீர்க்க முடியாத அவலம், காணாமல் போனவர்கள் தொடர்பான சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடியாத துன்பம் என்பவற்றால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வலுக்கட்டாயக் காணாமலடித்தலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின் உறுப்பு 5 சொல்கிறது: ***"பரவலாகவும் திட்டமிட்டமுறையிலும் வலுக்கட்டாயமாகக் காணாமலடிக்கும் செயல் மானிடத்துக்கு எதிரான குற்றமாகும்."***

காணாமலடித்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தை சிறிலங்கா 2016 மே மாதம் ஏற்புறுதி செய்தபோது, சிறிலங்காவில் வலுக்கட்டாயக் காணாமலடித்தலைச் செய்தவர்கள், ஆணையிட்டவர்கள், செய்யச் சொன்னவர்கள், அல்லது அதில் உடந்தையாக இருந்தவர்கள் மீதுகுற்றப் பொறுப்பு சுமத்ததனக்குள்ள சட்டக் கடமையை ஏற்றுக் கொண்டது. ஆனால் இன்றுவரை சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் இவ்விடயத்தில் நேர்மையான முயற்சி எதுவுமில்லை. காணாமலடித்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் 32ம் உறுப்பின் படி, ஒப்பந்த மீறல்கள் என்று குற்றஞ்சாட்டி பிற அரசுத் தரப்புகளிடமிருந்து கடிதம் பெறவலுக்கட்டாயக் காணாமலடித்தலுக்கு எதிரான குழுவுக்குள்ள தகுதியை சிறிலங்கா அறிந்தேற்றது. நாளதுவரை எந்தவொரு அரசுத் தரப்பும் சிறிலங்காவின் ஒப்பந்தமீறலைக் கருதிப் பார்க்கும் படி இக்குழுவைவெளிப்படையாகக் கேட்கவில்லை.

ஆயுதமோதலின் போதும் அதன் பிறகும் வலுக்கட்டாயமாகக் காணாமலடிக்கும் செயலை தமிழ்த் தேசத்துக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பின் கருவியாக சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்திற்று. கேடுகெட்ட வெள்ளைவான் ஆள்கடத்தல்கள் தமிழர்களுக்கும், ஆட்சியாளர்களுடன் முரண்பட்ட சில சிங்களவர்களுக்கும் எதிராய் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட அடக்குமுறைக் கருவியாயிற்று.

காணாமற்போனதமிழ்ப் பொதுமக்கள் ஒருபுறமிருக்க, போரின் முடிவில் சரணடைந்த தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளில் பெரும்பாலானோர் என்ன ஆயினர் என்பதும் இன்றுவரைெ தரியாமலேயுள்ளது.

2015 நவம்பர் மாதம் சிறிலங்காவுக்குச் சென்று பார்வையிட்டபின் வலுக்கட்டாயக் காணாமற்போதல் பற்றிய ஐநா செயற்குழு கூறியதுபோல தற்போது இச் செயற்குழுவின் பார்வையிலுள்ள காணாமற்போதல் நேர்வுகளின் தொகையில் சிறிலங்கா இரண்டாமிடம் வகிக்கிறது.

சரணடைந்து, போருக்குப் பிறகும் காவலில் இருப்பதாகக் காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ***"பெரும்பாலும் இறந்துவிட்டார்கள்"***என்று சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 2016 சனவரியில் கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளதானது, காணாமல் போனவர்கள் என்ன ஆனார்கள் என்ற உண்மை அவர்களின் குடும்பத்தினர்க்குத் தெரிவிக்கப்படும் என்று சிறிலங்கா

ஏற்றுக் கொண்ட கடப்பாட்டுக்கு மாறாகவே உள்ளது. (https://www.youtube.com/watch?v=pKkhLlBRzyc).

இதேபோல வடமாகாணத்தின் இப்போதைய ஆளுநர் ரெஜினால்டு கூரே 2017 மே 27ஆம் நாள் சொன்னதான ***“வலுக்கட்டாயக் காணாமலடித்தல் நிகழ்வுகள் தொடர்பானச ிறிலங்காவின் முயற்சிகாணாமல் போனோர் பற்றிய சான்றிதழ்கள்”***தருவதோடுநிற்கும் என்ற கூற்று எவ்வகையிலும் பன்னாட்டுச் சட்டப்படி சிறிலங்காவின் கடமைகளை நிறைவேற்ற சான்றிதழ்கள் வழங்குவதுமட்டும் போதுமானதாக இருக்கவே இருக்காது என்பதை உறுதிசெய்கிறது(https://www.tamilnet.com/art.html?catid=79&artid=38693).

சிறிலங்கா 2016 அக்டோபரிலும் 2017 மார்ச்சிலும் மனித உரிமை பேரவையில் ***“காணாமல் போனோர் அலுவலகம் அமைத்துள்ளோம், இது ஒருசாதனை”*** என்று கூறியதுஏமாற்றுப் பேச்சே. தமிழ்ச் சமுதாயத்திடமிருந்துஉருப்படியானஉள்ளீடுஏதுமில்லாமலும் மனிதஉரிமைமன்றத்தின் 30:1 தீர்மானம் (A/HRC/30/L.29) கோரியவாறு பன்னாட்டு வல்லுநர்களின் பங்கேற்பு ஏதுமில்லாமலும் காணாமல் போனோர் அலுவலகம் அமைத்திருப்பது சர்வதேசச் சமுதாயத்தை ஏமாற்ற சிறிலங்கா மேற்கொண்டுள்ள வஞ்சக முயற்சியே ஆகும்.

காணாமல் போனவர்களின் பாதிப்புற்ற குடும்பத்தினர் உள்நாட்டுச் சட்டத்தின் படிஉண்மையான ஈடுபெறும் வாய்ப்பை மறுப்பது மட்டுமல்லாமல், வலுக்கட்டாயக் காணாமலடித்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் 31ம் உறுப்பில் கண்டவாறு இந்தக் குடம்பத்தினரிடமிருந்து நேராக முறையீடுகள் பெறவலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய ஐநா குழுவுக்குள்ள தகுதியையும் சிறிலங்கா அரசாங்கம் அறிந்தேற்கவில்லை.

உள்நாட்டு வழிமுறையோ பன்னாட்டுவழிமுறையோ எதற்கும் இடமில்லை என்ற நிலையில், காணாமல் போனவர்களின் தாய்மார்களும் மனைவிமார்களும் கிளிநொச்சியில் கடந்த 168 நாளாகத் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்திவருகிறார்கள். ***எங்கள் குடும்பத்தினரை விடுதலைசெய்க! அல்லது அவர்களுக்கு என்ன நேரிட்டது என்ற உண்மையை அறிய நம்பகமான புலனாய்வுசெய்க***! என்பதே அவர்கள் கோரிக்கை. ஆமைதியான முறையில் நடைபெறும் இந்தப் போராட்டங்கள் அரசின் வன்முறைக்கு இலக்காகியுள்ளன. சான்றாக,செயற்பாட்டாளரும் காணாமல் போனஒருவரின் மனைவியும் மூன்று குழந்தைகளின் தாயுமான திருமதிஇமரியசுரேஷ் ஈஸ்வரி வீடு திரும்பும் வழியில் அடிஉதைக்கும் பாலியல் வன்தாக்கிற்கும் ஆளானார்.

மேற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு,காணாமல் போனவர்களின் பாதிப்புற்ற குடும்பத்தினருடன் தோழமையுணர்வுடன் கீழே ஒப்பமிட்டுள்ளநாங்கள்:

(1) அரசாங்கத்தினால் அல்லது அதன் முகவர்களால் இப்போது சிறைவைக்கப்பட்டுள்ள அனைவருமடங்கிய பட்டியலைவெளியிடும் படி சர்வதேச சமுதாயம் சிறிலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(2) சரணடைந்த தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பட்டியலை வெளியிடும் படிசர்வதேச சமுதாயம் சிறிலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(3) சிறைக் காவல் மையங்கள் அனைத்தையும் பன்னாட்டு நோக்கர்களும் சர்வதேச சமுதாய உறுப்பினர்களும் தடையின்றிப் பார்வையிட சிறிலங்கா அனுமதிக்கக் கோருகிறோம்.

(4) வலுக்கட்டாயக் காணாமலடித்தல் தொடர்பானகுழுவிடம் பாதிப்புற்றவர்கள் நேராக முறையீடுகள் தாக்கல் செய்யஅனுமதிக்கும் வகையில் வலுக்கட்டாயக் காணாமலடித்தல் ஒப்பந்தத்தின் 31ம் உறுப்பையொட்டிப் பிரகடனம் செய்யும் படி சர்வதேச சமுதாயம் சிறிலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(5) காணாமல் போனோர் அலுவலகத்தில் பன்னாட்டு வல்லுநர்களைச் சேர்த்துக் கொள்ளும்படி சர்வதேச சமுதாயம் சிறிலங்காவுக்குஅழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(6) அரசாங்கத்தால் சிறை வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலார் **"அநேகமாக இறந்துவிட்டார்கள்"** என்று சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 2016 சனவரிமாதம் கூறியதைப் புலனாய்வு செய்யும் படி சர்வதேசசமுதாயம் வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றியகுழுவைக் கேட்குமாறு வலியுறுத்துகிறோம்.

(7) வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ளஅரசுகள் அலகு 32ல் வழிவகை செய்யப்பட்டுள்ள கடப்பாடுகளை சிறிலங்கா நிறைவேற்றத் தவறியிருப்பதைக் கருதிப் பார்க்கும்படி சர்வதேச சமுதாயம் வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய குழுவைக் கேட்குமாறு வலியுறுத்துகிறோம்.

காணாமலடித்தலால் பாதிப்புற்றவர்களுக்கு நாங்கள் உரக்கச் சொல்வோம்: **"உங்களையாரும் மறந்துவிடவில்லை"**